## சென்னைப் பெருநகரில் பாரம்பரியமிக்க கட்டிடங்கள் / இடங்களை பட்டியலிடுதல்

சென்னையில் பாதுகாக்கப்படவேண்டிய பாரம்பரியமிக்க கட்டிடங்கள் பல உள்ளன. இரண்டாவது முழுமைத் திட்டத்தின் பகுதியான சென்னை பெருநகருக்கான வளர்ச்சி விதிகளில் பாரம்பரியமிக்க கட்டிடங்களை பாதுகாப்பதற்கான ஒழுங்குமுறைபடுத்தும் செய்முறைகள் கொடுக்கப்பட்டுள்ளன. சென்னைப் பெருநகரில் உள்ள பாரம்பரியமிக்க கட்டிடங்கள் மற்றும் இடங்களில் ஒருவர் கூடுதல் கட்டிடம் கட்வோ மாற்றியமைக்கவோ, செப்பனிடவோ அல்லது கட்டிடத்தை முழுமையாகவோ அல்லது ஏதாவது ஒரு பகுதியை இடிக்கவோ விரும்பின், வளர்ச்சி விதிகளில் கூறியுள்ளவாறு அவர் உறுப்பினர்–செயலர், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் அவர்களிடமிருந்து எழுத்துமூலம் முன் அனுமதி பெற வேண்டும். (விவரங்களுக்கு சென்னைப் பெருநகருக்கான வளர்ச்சி விதிகளில் வளர்ச்சி விதி எண் 31 இணைப்பு XXV –ஐ பார்வையிடவும்),

சென்னைப் பெருநகர் வளர்சசிக் குழுமம், சென்னைப் பெருநகரில் உள்ள பாரம்பரியமிக்க கட்டிடங்கள் /இடங்களை பட்டியலிடுவதற்கான பணியை மேற்கொண்டுள்ளது. 01.04,2010 நாளிட்ட அரசு ஆணை எண்.85, (வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை) –ல் அமைக்கப்பட்ட பாரம்பரியத்தை பாதுகாக்கும் குழு, பாரம்பரியமிக்க கட்டிடங்கள் மற்றும் இடங்களைப் பட்டியலிட கீழ்கண்ட பரந்த காரணிகளை தீர்மானித்துள்ளது.

(i) வரலாறு

(அ) **நாள்/கட்டப்பட்டக் காலம்**

வரலாற்று முக்கியத்துவத்தையும், கட்டிடத்தின் வயதிற்கு ஏற்றவாறு மதிப்பளிக்க

(ஆ) **கட்டிடங்கள் வெளிப்படுத்தும் போக்குகள்**

கட்டிடம் அல்லது இடம், அப்பகுதி குடியிருப்புகளின் தனித்தன்மை, குறிப்பிட்ட சமுதாய, பொருளாதார, அரசியல் அல்லது பண்பாடு ஆகியனவற்றை பிரதிபலிக்கலாம்.

(இ) **இதைசார்ந்த நிகழ்வுகள்**

அந்த பகுதி மண்டல அல்லது தேசிய அளவில் குறிப்பிடும்படியான அல்லது கவனிக்கத்தக்க வரலாற்று நிகழ்வுகளுடன் இந்த கட்டிடம் அல்லது கட்டிட அமைப்புகளை நேரடியாக தொடர்பு படுத்தும்படி அமைதல்

(ஈ) **தொடர்புடைய நபர்கள்**

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சிறந்தோர், சிறந்த குழுக்கள் மற்றும் நிறுவனங்கள், ஆகியவைகளுடன் தொடர்பு படுத்தும்படியான கட்டிடங்கள் மற்றும் இடங்கள்

## (ii) கட்டிடக்கலை

(அ) **வடிவமைப்பு**

நேர்த்தி வாய்ந்ததாக, கலைநயம் மிக்கதாக வடிவமைப்பில் மற்றும் ஒருங்கிணைப்பில் தனித்தன்மை கொண்டதாக, கைவினை கலைநயம் மற்றும் அதன் விவரங்களில் சிறப்பு மிக்கதாக (நிறம், விகிதம், நயம் முதலியனவற்றையும் உள்ளடக்கி) ஒரு கட்டிடம் அமையலாம்.

(ஆ) **தனி இயல்பு**

குறிப்பிட்ட கட்டிடக்கலையின் தனி இயல்பின் சிறப்பு, கட்டிடம் கட்டப்பட்ட காலம் (குறிப்பிட்ட கட்டிடகலையின் தனி இயல்பை பிற தனி இயல்புகளுடன் ஒப்பிடும் போது) ஆகியனவற்றை இந்தக் கட்டிடம் வெளிக்காட்டலாம்.

(இ) **வடிவமைப்பாளர்/கட்டிடம் கட்டியவர்**

உள்ளூர், மண்டலம் அல்து தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கட்டிடங்களை கட்டிய மற்றும் வடிவமைத்த கட்டிடக்கலை வல்லுனர்கள்/பொறியாளர்கள் அல்லது பிற வடிவமைப்புத் தொழில் சார்ந்தவர்கள் கட்டிய மற்றும் வடிவமைத்த கட்டிடமாக இருக்கலாம்.

(ஈ) **கட்டிட தோற்றத்தின் நிலை (அ) வெளிப்புற நிலை**

கட்டிடத்தின் நிலை, மேம்பட்டதாக இருக்கலாம், அல்லது கட்டுமானத்தில் ஏதேனும் சிறிய அல்லது பெரிய அளவில் பழுது பார்த்தல் வேண்டியிருக்கலாம், அல்லது அக்கட்டிடம் நிலைகுலைந்தும் இருக்கலாம்

(உ) **கட்டிட வடிவமைப்பின் ஒருங்கிணைப்பு**

பாரம்பரியமிக்க கட்டிடத்தில் ஏதேனும் மாற்றம் முன்பே செய்யப்பட்டிருப்பின் அதனை சீர்படுத்தக்கூடிய தன்மை மற்றும் அதனை பராமரிப்பதற்கு ஏற்றத் தன்மை ஆகியன

(iii) **பண்பாடு**

**சமுதாய தொடர்பு**

உணர்வுகள் அல்லது அடையாளச் சின்னமாக உள்ள காரணங்களுக்காக ஒரு கட்டிடம் அல்லது இடம் சமுதாய தனித்தன்மை வாய்ந்ததாக இருக்கலாம்

-----